பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 02 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1, ஜம்மு-கஷ்மீரில் அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு நீக்கப்பட்ட பின்னர் வரலாற்று சிறப்புமிக்க வளர்ச்சியை நோக்கி பயணித்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

2. அஸ்ஸாமில் போடோ சமூகத்தினருக்கு அதிகாரம் அளிப்பதற்கு மத்தியிலும், அம்மாநிலத்திலும் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுகள் பாடுபட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. ஜனநாயகத்தின் மாண்புகளை மேற்கத்திய நாடுகள் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்தியா - இலங்கை இடையே முக்கிய கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது என இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி இன்று துபாய் புறப்பட்டுச் சென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரில் அரசியல் சாசனத்தின் 370-வது பிரிவு நீக்கப்பட்ட பின்னர் வரலாற்று சிறப்புமிக்க வளர்ச்சியை நோக்கி பயணித்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-வில் மாதா வைஷ்ணவ் தேவி பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், தற்போது ஜம்மு-கஷ்மீர் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக கூறினார்.

இன்று நீடித்த வளர்ச்சி உறுதி செய்யப்பட்டு மக்களின் விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

1980-ஆம் ஆண்டுகளில் தாம் ஜம்மு-கஷ்மீர் பயணம் மேற்கொண்டதை நினைவு கூர்ந்த திரு ஜக்தீப் தன்கர், அப்போதிருந்த சூழல் முற்றிலுமாக மாறி தற்போது அமைதி மற்றும் முன்னேற்றத்தை காண முடிவதாகக் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள போடோ சமூகத்தினருக்கு அதிகாரம் அளிக்கவும், அந்த மக்களின் விருப்பங்களை நிறைவேற்றவும் மத்தியிலும், அம்மாநிலத்திலும் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டுணி அரசுகள் அயராது உழைத்து வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.,

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்த பணிகள் தொடர்ந்து ஊக்கத்துடன் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்துள்ளார்.

நாளை மறுநாள் கோக்ரஜாரில் நடைபெறவுள்ள சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்திற்கு திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

காசி தமிழ் சங்கமம் உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் இன்று மாலை தொடங்கியது.

மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இந்நிகழ்ச்சியை உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், தகவல் ஒலிபரப்புத்துறை இணை இணை அமைச்சர் திரு எல் முருகன் ஆகியோர் கூட்டாக தொடங்கி வைத்தனர்.

தமிழகத்தின் பாரம்பரிய கலைகளான தப்பாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக தமிழகத்திலிருந்து ஏற்கனவே எழுத்தாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அடங்கிய முதல் குழுவினர் வாரணாசி சென்றடைந்தனர்.

இந்நிகழ்ச்சி வரும் 24-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் பங்கேற்கும் பக்தர்களின் வசதிக்காக அடுத்த மூன்று நாட்களுக்கு கூடுதலாக இரண்டாயிரத்து 250 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

வார இறுதி நாட்கள் என்பதால் இன்று வழக்கத்தைவிட கூடுதலான யாத்திரிகள் புனித நீராட வருவார்கள் என்பதால் அம்மாநில போக்குவரத்துக் கழகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பிரயாக்ராஜில் உள்ள தற்காலிக பேருந்து நிலையங்களிலிருந்து இந்த பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உத்திரபிரதேச போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு தயா சங்கர் சிங் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பிரயாக்ராஜ் சங்கம் ரயில் நிலையம் இன்றும் நாளையும் தற்காலிகமாக மூடப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு ரவீந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

[]<<<>>>[]

தில்லி புதிய முதலமைச்சர் ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும் என்று தில்லி பிரதேச பிஜேபி தலைவர் திரு வீரேந்திர சச்சிதேவா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்ற பிஜேபி உறுப்பினர்களின் கூட்டம் அக்கட்சியின் மத்திய பார்வையாளர்கள் முன்னிலையில் விரைவில் நடைபெறும் என்றும், அதில் சட்டமன்ற கட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுவார் என்றும் கூறினார்.

புதிய அரசு பதவியேற்பு விழா தில்லி ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நடைபெறும் என்றும் திரு வீரேந்திர சச்சிதேவா தெரிவித்தார்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் 48 தொகுதிகளில் வெற்றிபெற்று பிஜேபி ஆட்சியை கைப்பற்றியது.

[]<<<>>>[]

ஜனநாயகத்தின் மதிப்புகளை மேற்கத்திய நாடுகள் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜெர்மனியின் மூனிச் நகரில் சர்வதேச பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் பங்கேற்று பேசிய அவர், தெற்காசிய நாடுகளில் ஜனநாயகத்துக்கு எதிரான சக்திகளுக்கு மேற்கத்திய நாடுகள் ஊக்கம் அளித்து வருவது வருந்தத்தக்கது என்று கூறினார்.

உலக அளவில் ஜனநாயகம் என்பது அவசியமானதாகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஜனநாயகத்தின் மீது மிகுந்த நம்பிக்கைக் கொண்டு உறுதிப்பாட்டுடன் செயல்பட்டு வருவதாகவும் திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

உயர்கல்வியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சி அருகே மெஸ்ரா என்ற இடத்தில் தனியார் தொழில்நுட்ப நிறுவனத்தின் பவள விழா கொண்டாட்டங்களில் பங்கேற்று அவர் பேசினார்.

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு மற்றும் கணினி தொழில்நுட்பம் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இத்தகைய தொழில்நுட்பத்தை கையாண்டு இளைஞர்கள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பார்கள் என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

முன்னதாக மாணவிகளுடன் கலந்துரையாடி குடியரசுத் தலைவர், மகளிருக்கு அதிகாரம் அளிப்பது அவசியமாகிறது என்று குறிப்பிட்டார்.

தொழில் முனைவோர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மாணவ மாணவிகளின் அறிவுசார்தொழில் நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

2025-ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டு விழா சென்னை ஆளுநர் மாளிகையில் இன்று நடைபெற்றது.

தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி சிறப்பு விருந்தினராக பங்கேற்று விருதுபெற உள்ளவர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

தொழிலதிபர் திரு நல்லி குப்புசாமி, பரதநாட்டிய கலைஞர் சோபனா உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர், சமூகத்திற்காக தொண்டாற்றி வரும் அரியப்படாத சாதனையாளர்களைக் கண்டறிந்து பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இந்தியா - இலங்கை இடையே முக்கிய கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான பேச்சுக்களை வலுப்படுத்துவது என இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் திரு சதிஷ் சந்திர துபே புதுதில்லியில் இன்று இலங்கை தொழில்துறை அமைச்சர் திரு சுனில் Handunnetti -வுடன் இது தொடர்பாக பேச்சு நடத்தினார்.

சுரங்க தாதுக்களை வெட்டி எடுத்தல், சுரங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இரு தரப்பும் இணைந்து செயல்படுவது குறித்து அப்போது விரிவாக ஆலோசிக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சி மேம்படும் என்றும் மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த மாதம் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி காஸா பகுதியிலிருந்து மேலும் மூன்று இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸ் விடுவித்துள்ளது.

பிணைக் கைதிகளை பரிமாறிக் கொள்வதற்கான ஆறாவது ஒப்பந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்க உள்ள ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி இன்று துபாய் புறப்பட்டுச் சென்றது.

இந்திய அணியுடன் தலைமைப் பயிற்சியாளர் கௌதம் கம்பீர் உள்ளிட்டோரும் துபாய் சென்றனர்.

இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் வரும் 20-ஆம் தேதி பங்ளாதேஷை எதிர்கொள்கிறது.

பாகிஸ்தானுடன் வரும் 23-ஆம் தேதியும், நியூசிலாந்துடன் அடுத்த மாதம் இரண்டாம் தேதியும் இந்திய அணி விளையாடவுள்ளது.

[]<<<>>>[]

புரோ லீக் ஹாக்கிப்போட்டி புவனேஷ்வரில் இன்று தொடங்கியது.

மகளிர் பிரிவில் இந்தியா மூன்றுக்கு இரண்டு என்ற கோல் கணக்கில்- இங்கிலாந்தை வென்றது.

ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்பெயின் அணிகளுக்கு இடையோன ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

[]<<<>>>[]

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

[]<<<>>>[]

நான்காவது தெற்காசிய சீனியர் தடகள சாம்பியன் போட்டிகள் ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில், வரும் மே மாதம் மூன்றாம் தேதி தொடங்கி ஐந்தாம் தேதிவரை நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னர் ஊக்கமருந்து பயன்படுத்தியது உறுதிபடுத்தப்பட்டதை அடுத்து அவர் மூன்று மாதங்களுக்கு டென்னிஸ் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**